25th July 1962

III.—PRIVILEGE MATTER *re* THE ABSENCE OF THE MAIN OPPOSITION PARTY

Sri K. T. KOSALRAM : Mr. Speaker, Sir, I want to bring the following matter of previlege to the notice of the Speaker and the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் கொண்டுவர விரும்பும் பிரச்சனை தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள் இந்தச் சபைக்கு வாராமல் இருப்பது சம்பந்தமானது. அது எந்த அளவுக்கு உரிமைப் பிரச்சனையின் கீழ் வரும் என்பதைப்பற்றி சபாநாயகராகிய தாங்கள் கூற இருக்கிறீர்கள். நமது அரசியல் சட்டத்தின் 190-ஆவது பிரிவு 4-ஆவது உப பிரிவின்படி சபை அங்கத்தினர்கள் தொடர்ந்து 60 நாட்கள் வரையிலும். . .

Mr. SPEAKER : This is not at all a point of order. I know the Article. If I have got any doubt, I will ask for the opinion of the hon. member. Let the hon. member, Sri K. T. Kosalram proceed with his speech.

திரு. கே. டி. கோசல்ராம் : இந்தச் சபை, இந்த ராஜ்யத்தில் ஒரு வருஷத்திற்குச் செய்யவேண்டிய நல்ல காரியங்களைப் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம் : சுருக்கமாகவே சொல்கிறேன். அப்படியிருக்க முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தினர்கள் 50 பேர்களும் வரவில்லையென்பது மட்டும் அல்ல, இந்தச் சபையின் லாபியிலும் அங்கும் இங்கும் பார்க்கிறேன், நேற்றையதினமும், முன் தினமும் திரு. அரங்கண்ணல், திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. அப்துல் கலீல் ஆகிய மூன்று பேர்களும் சபையைச் சுற்றி வந்துகொண்டே இருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : எங்கே ?

திரு. கே. டி. கோசல்ராம் : இந்தச் சபையைச் சுற்றிய லாபியில்—அதாவது செக்ரடேரியட் ப்ரிமிஸிஸ்குள் பார்க்கிறேன். கனம் அங்கத்தினர் திருமதி ஜகதாம்பாள் இந்தச் சபைக்கு வந்தபோது அவர்களையும் கூட்டிக்கொண்டு போனார்கள்.

திரு. கே. மூக்கையாதேவர் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

Mr. SPEAKER : There can be no point of Order. The Hon. Member Sri K. T. Kosalram may continue.

திரு. கே. டி. கோசல்ராம் : நான் நினைக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்

[திரு கே. டி. கோசல்ராம்] [25th July 1962

பது மட்டுமல்ல, இந்தச் சபையை அவமதித்தார்கள் என்பது மட்டும் அல்ல, இந்த மன்றத்தில் பிரமாணம் எடுத்துக்கொண்ட படி, எவ்வளவு தூரம் இந்தச் சபையில் இருந்து மக்களுக்காகத் தொண்டாற்ற வேண்டுமோ அதைச் செய்யத் தவறிவிட்டார்கள். மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளை இந்தச் சபையின் மூலம் செய்வதற்கு அவர்களுக்குச் சர்வ உரிமை இருக்கிறது. அந்த உரிமை பாதிக்கக்கூடிய அளவில் பொதுமக்களுக்குத் துரோகம் செய்து, இந்தச் சபைக்கு வருகின்றவர்களையும் வெளியே கூட்டிக் கொண்டு போகிறார்கள் என்றால் இந்தச் சபையை அவமதிக்கின் றார்கள் என்றே நான் நினைக்கிறேன். 19-ஆம் தேதி ஏதோ நடந்தது. அதற்குப் பின்னால் சிலபேர் கைதியாகி விட்டார்கள் என்றால் 36 பேர்கள் வெளியில் இருக்கிறார்கள்.

MR. SPEAKER : I have heard sufficiently. The hon. Member Sri K. T. Kosalram may resume his seat. The hon. member Sri K. Mookiah Thevar wanted to raise a point of order What is it ?

திரு. கே. மூக்கையா தேவர் : கனம் அங்கத்தினர் திரு. கோசல் ராம் அவர்கள் சொல்கிறபோது, இந்தச் சபையில் இல்லாத அங்கத்தினர்களைப் பற்றி, இந்தச் சபையில் அவர்கள் இல்லாது வெளியில் சுற்றிக்கொண்டிருந்தார்கள், ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு சுற்றிக்கொண்டு . . .

MR. SPEAKER : No, no, the hon. Member Sri K. T. Kosalram did not mean like that.

கனம் திரு. கு. காமராஜ் : அவர் சொன்னது, சபைக்கு வரக் கூடிய அங்கத்தினர்களை வெளியில் இருந்து வராமல் தடுக்கிறார் கள் என்பது தான்.

திரு. கே. மூக்கையா தேவர் : குறிப்பிட்ட அங்கத்தினர் சபை யில் இல்லாத போது அதைப்பற்றிக் குறிப்பிடலாமா ?

(Some members rose)

MR. SPEAKER : I would request all the hon. Members to sit down. Sri M. Kalyanasundaram may now say what he wanted to say.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அங்கத்தினர் திரு. கோசல் ராம் கொண்டு வந்திருக்கக்கூடிய பிரச்னையானது இந்தச் சபை யில் உள்ள அங்கத்தினர் சபைக்கு வராமல் இருப்பது பற்றியது ஆகும். தங்களுடைய ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் முறையில் இந்தச் சபைக்கு வராமல் இருப்பதற்குக் கனம் அங்கத்தினர் களுக்கு உரிமை உண்டு என்பது என் அபிப்பிராயம். கடந்த பத்தாண்டு காலமாக மாற்றுக் கட்சிகள் தங்கள் ஆட்சேபணை யைத் தெரிவிப்பதற்கு அம்மாதிரி முறையைக் கையாண்டு வந் திருக்கின்றன. அது சரியா இல்லையா என்பது பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் இருக்கலாம். அவர்களுடைய திறமையைப் பற்றி

25th July 1962] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

அபிப்பிராயம் இருக்கலாம். அவர்களுக்கு இருக்கிற சந்தர்ப்பத்தை இங்கே பயன்படுத்தவில்லையென்பது பற்றி அபிப்பிராயம் இருக்கலாம். அது அவர்களுக்கு வாக்களித்த 34 லட்சம் மக்கள் பார்த்து தீர்ப்பு அளிக்கப்படவேண்டிய விஷயம்.

ஆனால் இந்தச் சபைக்கு வராமல் இருப்பதற்கு அரசியல் சட்டத்திலேயே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 60 நாட்கள் தொடர்ந்து வராமல் இருக்கலாம். அவர்களை வரவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவர்களுடைய உரிமையை அவர்கள் சரியானபடி பயன்படுத்துகிறார்களா இல்லையா என்பது ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி தனியான விஷயம். ஆனால் அவர்கள் வராதது பற்றி எவ்வித உரிமைப் பிரச்னையும் எழவில்லையென்பதைமட்டும் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : At the outset this matter of privilege is out of Order.

As Sri M. Kalyanasundaram pointed out, if a Member is absent for sixty days consequtively without the permission of the House, action will be taken under Article 190 (4) of the Constitution. All the hon. Members are normally bound to attend the meetings of this House and discharge their duties not only to the State and to their constituencies. But if some hon. Members are absent without the permission of the House, they will suffer the consequences and it is not for this House to consider that point.

Regarding the hon. Member, Sri K. Mookiah Thevar's point I am really sorry that he has used such a language as has created a wrong impression in the minds of the hon. Members of this House. Such language must be avoided hereafter.

திரு. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, நான் தாங்கள் சொல்கிற அபிப்பிராயப்படி தவறாக அப்போது சொல்லவில்லை.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவ்வாறு பேசியிருக்க வேண்டாம். திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னது வேறு, கனம் அங்கத்தினர் சொன்னது வேறு.

திரு. கே. மூக்கையா தேவர் : அதற்காக வருந்துகிறேன். நான் இந்த மன்றத்தில் அந்தப் பொருளில் பேசவில்லையென்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

IV.—CALLING ATTENTION TO THE HARDSHIP EXPERIENCED BY THE AGRICULTURISTS OPENING PUMPSETS DUE TO THE COLLECTION OF MINIMUM GUARANTEE

MR. SPEAKER : Now, the hon. Member, Sri M. Kalyanasundaram, will call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely the hardship